

# பரலோக பொக்கிஷங்கள்

**மேலானவைகளையே நாடுங்கள்!** (கொலோசெயர் 3:2)

## விலையேறப்பெற்ற அவரது, மாறாத கிருபை!

**ம**கா கிருபை நிறைந்தவர் நம் ஆண்டவர் இயேசு! இந்த உலகத்தின் மனுக்குலம் அனைத்துமே அவரது அன்பான செட்டைகளின் நிழலில்தான் வாழ்கிறார்கள்! அவர்கள் தீயோரா யிருந்தாலும், நல்லோராயிருந்தாலும், 'மனுப்புத்திரர்' அனைவரையும் அன்புகூர்ந்து காப்பதை 'தேவனின் அருமையான கிருபை' என்றே வேதம் கூறி வியக்கின்றது! (சங்.36:7).

ஆகிலும், அவர் மானிடர் எல்லோர்மீதும் காண்பித்திடும் கிருபையை ''கிருபை, கிருபை'' என வெறுமையாய் கொண்டாடிச் சென்று விடாதீர்கள்! 10-ம் வசனம் குறிப்பிடும் **''உம்மை அறிந்தவர்கள் மேல் உமது கிருபை'' என்ற தனிப்பட்ட பாக்கியமே பேரின்ப நித்தியானந்தம்!** அது, அவரே நம் மேய்ப்பனாய் நின்று நடத்தும் ''நம் ஜீவனுள்ள நாட்களெல்லாம்'' தொடரும் நிலைத்திருக்கும் கிருபை! (சங்.23:6). சத்துருக்களோ, மரண இருளோ போன்ற யாவற்றிலிருந்தும் காத்திடும் போதுமான அந்த கிருபை, கர்த்தரை தன் சொந்த மேய்ப்பராய் பெற்றவர்களுக்கே அருளப்படுகிறது! இந்த பாக்கியமே, நமக்கும் சொந்தமாய் மாறக்கடவது!

-*tr*

பெட்டகம் 40 | நவம்பர் | பரல்கள் 11

2024



## ‘தொழுகையின்’ சுரமண்டல கீதம், இன்று வெகுவாய் மங்கிவிட்டது!

தேவனால் ஆட்கொள்ளப்பட்டு, நீங்காத அவரது சிந்தனையால் நிறைந்திருக்கும்படியே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்! ஏனெனில், தேவன் ஆவியாயிருக்கிறார்.... அவரை தொழுது கொள்ளுகிறவன் ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும்!

தேவனை ஆராதிப்பதற்கென்றே மனுஷன் சிருஷ்டிக்கப்பட்டான்! தன்னை ஆராதித்து இசைத்திட, அவர் மனிதனுக்கு மிகப்பெரிய இசைக்கருவி தந்தாரென்றே சொல்ல வேண்டும்! தேவன் கூறினார்: “நான் சிருஷ்டித்த எல்லா சிருஷ்டிப்புகளுக்கும் மேலாக, உனக்கே இந்த தாவீது ஆராதித்தது போன்ற விலையேறப்பெற்ற ‘சுரமண்டலம்’ தந்துள்ளேன்” ஆனால் மனுஷனோ.... ‘தொழுகையின்’ இந்த அற்புத இசைக்கருவியை, மண்ணில் எறிந்துவிட்டான்! கிறிஸ்து இந்த பூமிக்கு ஏன் வந்தார்? பின்மாறிப் போன மானிடர்களை, மீண்டும் “ஆராதிக்கிறவர்களாய்” மாற்றும்படியே வந்தார்!

ஆனால் “ஆராதனை.... ஆராதனை எனக்கூறிக் கொள்ளும் இன்றைய கிறிஸ்தவ சபைகளில் தேடிப்பார்த்தால், மெய்யான ஆராதனை அங்கு இல்லை!” அந்த ஆதி மதுர இசையின், மாசற்ற இன்னிசை ஓசை அங்கு பழுதுபட்டு, காணப்படவில்லை!! தெய்வ ஆராதனையை உடனே விளக்கிச் சொல்ல “அதை ஒருவன் தன் இருதயத்தில் உணர வேண்டும்!” என்பதேயாகும். ஆராதனை வழிமுறையை ஒருவன் செய்துவிட்டு, தன் இருதயத்தில் தேவனை உணராத மனுஷன், “ஆராதிக்கவில்லை” என்றே உறுதியாய் கூறமுடியும்! அதுபோன்ற வஞ்சனையிலிருந்து, தேவன் தம் சபையை காப்பாராக!

*-Ed*

**2025 ‘பரலோக பொக்கிஷங்கள்’ சந்தா புதுப்பிக்கவும்**

வருட சந்தா **ரூ.170**/- தயவுசெய்து உடன் **M.O** செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **நவம்பர் 25-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும். புதிதாய் வாங்குபவர்கள் ‘புதிது’ என்று குறிப்பிடவும். நன்றி!

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்! சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : (for Spiritual messages) paralogapokkishangal
You Tube : (for Gospel messages) gospelforall

## நீங்களும் உபத்திரவ குகையில் தெரிந்து கொள்ளப்பட்டவரா?

*தெரிந்து கொள்ளப்பட்டவர்களை, தேவ சாயலாக்குவார்*

ஏசாயா 48:10-ம் வசனம் கூறும் "உன்னை உபத்திரவத்தின் குகையிலே தெரிந்து கொண்டேன்" என்ற பரத்தின் வார்த்தை இந்த வனாந்திரமான வாழ்க்கையின் துன்பத்திலிருக்கும் நம் இருதயத்தை 'மெல்லிய மழை தூரலின் குளிர்ந்த காற்றாய்' மகிழச் செய்கிறதல்லவா? அதே வேளையில், இந்த வசனம் நம் உபத்திரவங்களையே அழித்துவிடும் 'இரும்பு கோட்டையாக' கருதிவிடக்கூடாது! ஏனெனில்:

1. துன்பங்கள் வரட்டும், நானோ தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவன்! எனவும்,

2. 'வறுமை கூட' என் வீட்டு வாசலில் முண்டிக் கொண்டு நிற்பதை காண்கிறேன்..... ஆனால் தேவனோ என் வீட்டிற்குள் தான் இருக்கிறார்! ஏனெனில், நானோ தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவன்! எனவும்,

3. 'சுகவீனங்கள்' வீட்டிற்குள் வர காத்திருக்கலாம்! வியாதிகள் தீர்க்கும் அருமருந்தாகிய விசுவாசம் எனக்குள் இருக்கிறதே! ஏனெனில், நானோ தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவன்! எனவும்,

4. இந்த வனாந்திர ஜீவியத்தின் கண்ணீர் பள்ளத்தாக்கில் எது வேண்டுமானாலும் சம்பவிக்கலாம்! ஆகிலும், **அவர் என்னை தெரிந்து கொண்டார் என்பதை நான் நிச்சயமாய் விசுவாசித்து அறிந்திருக்கிறேன்!** எனவும், நீங்கள் அறிக்கை செய்ய வேண்டியது அவசியமல்லவா?

ஓ கிறிஸ்தவனே, நீ அஞ்சுவதற்கு காரணம் ஏதும் இல்லையே! ஏனெனில், இயேசு உன்னை விட்டு நீங்காமல் உன்னோடுகூடவே எப்போதும் இருக்கிறார். உங்களுக்கு நேர்ந்திடும் அக்கினிமயமான எல்லா உபத்திரவங்களிலும், கர்த்தருடைய சமூகம் உங்களுக்கு சகல ஆறுதலாய் மாத்திரம் அல்லாமல், அவரது சமூகம் உங்களை முற்றிலுமாய் பாதுகாத்திடும் என்பதையும் அறிந்திடுங்கள்!

*உங்களை அவர்* "**தமக்குச் சொந்தமாய் தெரிந்து கொண்டபடியால்**" *உங்களைத் தனியே விட்டுவிட்டு ஒருபோதும் விலகிச் செல்ல மாட்டார். இந்த உத்தமமான உண்மையை C.H.ஸ்பர்ஜன் அவர்கள் கூறியபோது:*

> **"பயப்படாதே நான் உன்னோடுகூட இருக்கிறேன்" என்ற அற்புதமான வாக்குதத்தம் உங்களுக்குச் சொந்தமாய் இருந்தபோதிலும், உபத்திரவத்தின் குகைக்குள் செல்லும்போது இந்த வாக்குதத்தம் நிறைவேறுவதை காண்பதே மிகுந்த அற்புதம்! ஏனெனில், அவர்களே கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்! என, அழகுபடக் கூறினார்.**

*அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட தேவ ஜனங்களுக்கு, உபத்திரவத்தின் வேதனை எவ்வளவு அதிகமாய் பற்றி எரிந்தாலும், ஆரம்பத்தில் கூறியப்படியே 'தேவனுடைய சுவாசமான தென்றல்' அவர்கள்மீது வீசிக் கொண்டேதான் இருக்கும் என்ற உண்மையை எல்லா பக்தர்களும் அறிவார்கள்! அப்படியிருந்தும், உபத்திரவத்தின் அகோரம், நம்மை நடுங்க வைப்பதுபோல் தோன்றும் அந்த வேளையில், நீங்கள் நிமிர்ந்து நின்று* "**கர்த்தருக்குப் பிரியமானது என்னில் வாய்க்கட்டும்**" *என அறிக்கை செய்திட்ட அற்புத வாக்கியம், அந்த கொடிய உபத்திரவ குகையின் ஜூவாலை உங்களைத் தீண்டாமல் அமைதியாகி விட்டதை, நீங்கள் கண்டு வியந்திட முடியும்!*

*உபத்திரவத்தின் வெப்பம் என் இருதயத்தை இளகச் செய்த அந்த நேரத்தில் 'தேவ சாயலை என்னில் உருவாக்க' ஒரு சம்மட்டி மீண்டும் மீண்டுமாய் என்னை அடித்ததைப்போல் உணர்ந்தேன். அந்த கஷ்டத்தின் உச்சத்தில், அவருக்குள் பழகிய என் நாவுகள்* "**கர்த்தருக்குப் பிரியமானது என்னில் வாய்க்கட்டும்**" *என கூறிய அற்புத வாக்கியம், அவரது வலிமையான கரத்திற்குள் என்னை அமைதியுடன் அமரச் செய்து விட்டது!*

*இளகி போயிருந்த என் இருதயத்தை, பல்வேறு திசைகளில் திருப்பி 'தீப்பொறி பறக்க' இடைவிடாது அடித்துக்கொண்டே இருந்தார்! சில மணி நேர இடைவெளிக்குப் பிறகு, மீண்டுமாய் என்னை பழுக்க காய்ச்சி அதை வளைத்து.... என்ன செய்தார் தெரியுமா? என்னை அப்படியே குளிர்ந்த நீரில் நனைத்து, மெதுவாக என்னை துடைத்து எடுத்தார்! ஆ, இது என்ன அற்புதம். சூரிய ஒளிபோல் நான் பிரகாசமாய் ஜொலித்து விட்டேன். என்னை பத்திரமாய் தனது பெட்டக அறைக்குள் கொண்டு வந்து வைத்தார்! எனக்கு முன்பாக, அநேக ஜொலிக்கும் சுத்த தங்கமான ஆபரணங்கள் இருப்பது கண்டு வியந்து போனேன்!*

இவ்வாறாக, கர்த்தருடைய கரத்தின் கிரியைகளை கொஞ்சம் கொஞ்சமாய் கண்டு வந்த நீங்கள், இனிமுதல் துன்பத்தில் எப்படி உங்களால் முறுமுறுக்க முடியும்?

> "**கர்த்தருடைய நோக்கம் உங்களைக் குறித்து மிக நேர்த்தியாய் இருக்கிறபடியால், துன்பங்களும் நீண்ட பயணமாய் இருப்பதை காண்பீர்கள்! ஆகிலும், நிச்சயம் முடிவு உண்டு! அது இன்றோ அல்லது நாளையோகூட இருக்கலாம்!**

அவ்வளவு மகத்துவ கிரியைகளை உங்களுக்குள் அவர் செய்கிறபடியால் "**கர்த்தருக்கு பிரியமானது என்னில் வாய்க்கட்டும்**" என நீங்கள் அறிக்கை செய்த வாக்கியம், மிகுந்த நம்பிக்கைக்குரியதாய் உங்களுக்கு மாறிவிடும்! அந்த வாக்கியமே கடைசி வரை நிலைத்திருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ளும்!

'ரிச்டர்' (Richter) என்ற பரிசுத்தவான் கூறும்போது 'உபத்திரவங்கள்' ஒரு சுமையை போல் ஏற்பட்டாலும், அது கடலுக்குள் ஆழமாய் பயணம் போக ஆயத்தமாயிருந்த உங்கள் மேல் வைத்த பிராண வாயுவின் கணத்த சிலிண்டர் போலவே நீங்கள் காண்பீர்கள்! 'அந்த சுமை' உங்களை கடலின் ஆழத்திற்குள் கொண்டு சென்று, பிரகாசிக்கும் விலையேறப்பெற்ற முத்துக்களை நீங்கள் கண்டடையும்படிச் செய்து விடும்! என பெருமகிழ்ச்சியுடன் கூறினார்.

- *Mrs.சார்லஸ் கஃவ்மென்*

---

## எந்நிலையிலும் பக்தியான பிரதிபலிப்பே பரலோகம்!

*'தீதுக்கு தீது' நரகத்தை கொண்டு வரும்*

ஒரு வாலிபனாய் இருக்கும் நீங்கள், அடுத்த பட்டணத்திலுள்ள ஒரு பெண்ணை திருமணத்திற்குப் பேசி முடிக்கும்படி முன்குறித்து, பிரயாணத்திற்கும் ஏற்பாடு செய்துவிட்டீர்கள்! ஆனால், அந்த குறித்த பயண நாளில் புகைவண்டியைத் தவறவிட்டுவிட்டீர்கள்! அதனால், ஒருநாள் தாமதமாக அந்த வீட்டிற்குச் சென்றீர்கள். ஆ, இது என்ன.... மாப்பிள்ளை வராதபடியால், அன்று காலை அவள் வேறொருவனுக்கு நிச்சயிக்கப்பட்டுவிட்டாள் என்ற செய்தியால் சற்று குலுங்கிப்போனீர்கள். ஆகிலும், நீங்களோ **சூழ்நிலைகளை தேவன் செம்மையாகவே ஆண்டு ஒழுங்குசெய்கிறார்** என்பதில் ஆழமான விசுவாசம் கொண்ட சகோதரன்! எனவே, நடந்துவிட்ட சம்பவத்தால் நீங்கள் சிறிதுகூட தடுமாறாமல், ஆணித்தரமான பிரதிபலிப்பையே இந்த சமயத்தில் வெளிப்படுத்தினீர்கள்! "இந்தப் பெண், தேவன் எனக்காக

*நியமிக்கப்பட்டவளல்ல! இப்போது அவள் தேர்ந்தெடுத்த மணமகனே, என்னைவிட ஏற்ற துணை! இதுதான், உண்மை! என்னை உன்னிப்பாகக் கவனித்து கண்காணிக்கும் அவரது உத்தமம் மகத்துவமானதே, அல்லேலூயா!" என்றே பிரதிபலித்து நீங்கள் ஜொலிப்பது, உங்களை சூழ்ந்துள்ள சபை மக்களுக்கும்! வாலிபர்களுக்கும் ஓர் மிகப் பெரிய சவால்! பின்பற்ற உகந்த சிறந்த மாதிரி!*

*இவ்வாறு, நமக்கு ஏற்ற நல்லது எது? என தெரியாதவர்களாய் தேவனிடம் நம்மை நிபந்தனையின்றி அர்ப்பணிக்கும் போதுதான், நமக்கு உதவும்படி தேவன் தீவிரித்து வருகின்றார். நமக்கு நன்மை மாத்திரமே செய்திடும், இந்த நல்ல ஆண்டவரை, நாம் துதிப்பது மாத்திரமே தகும்! ஒவ்வொரு காரியத்திலும் நாம் இவ்வித நன்றியுள்ள வர்களாய் கர்த்தருக்குள் ஜீவிக்கும் ஜீவியம், நம்மில் நிலையான சமாதானத்தையும், சந்தோஷத்தையும் தங்கிவிடச் செய்கின்றது!*

> **" நாம் எது செய்தாலும், அதை தேவன் மீது கொண்ட விசுவாசம் நிறைந்த நன்றியோடு செய்தால் மாத்திரமே, நாம் தேவனை சரியானமுறையில் சேவித்திட முடியும். மீனுக்குத் தண்ணீர் ஒன்றே ஜீவிய ஸ்தலமாய் இருப்பதுபோல, நாம் ஜீவிப்பதற்கும் விசுவாசத்தோடு கூடிய நன்றி மிகுந்திருப்பதே உகந்த ஸ்தலமாகும்!**

**வி***பத்துக்களும், மரணமும் சம்பவிக்குதே! அவைகளை நாம் காணும்போது, எப்படி நாம் பக்தியான முறையில் பிரதிபலிப்பது? மற்ற காரியங்களில் நாம் எவ்வாறு எதிர்கிரியைகளால் பிரதிபலித்திட வேண்டுமோ, அதுபோலவே இதிலும் தேவபக்தியாய் பிரதிபலித்திடுங்கள்! சத்திய வாக்கு சொல்வதை கேளுங்கள்:* "**கர்த்தருடைய செயல்** *இல்லாமல் ஊரில் தீங்கு உண்டாகுமோ?" (ஆமோஸ் 3:6). "உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப் பட்டிருக்கிறதே!" (மத்தேயு 10:30). இவ்வாறெல்லாம் தேவன் வாக்குரைத்தபடியால், எது நமக்கு நன்மையாக முடியும் என்பதை தேவன் அறிந்திருக்கிறார் என்பதில், மனதை ஊன்றப் பதித்துவிடுங்கள்!*

*இவ்வித மறுரூபமடைந்த மனதை நீங்கள் பெற்றுவிட்டால், உங்களுக்கு நேரும் எவ்வளவு துயரமேயானாலும், எதிர்பாராத விபத்துக்களேயானாலும், 'அவை உங்களுடைய மேலான நன்மைக்காகவே நிகழ்ந்தது' என்பதை நீங்கள் விசுவாசித்திட முடியும்!*

> **" நீங்கள் மனுஷர் புகழ்ச்சியைத் தேடுகிறவர்களாயும், அதைப் பெறுபவர்களாயும் இருந்தால் அல்லது குறைந்தபட்சம் மற்றவர்கள் என்னைக் குறித்து என்ன நினைக்கிறார்கள்**

**அல்லது பேசிக்கொள்கிறார்கள் என்பதை அறிவதற்கு ஆர்வம் கொண்டவர்களாய் இருந்தால்.... இதுவே, நீங்கள் எல்லா சூழ்நிலைகளிலும் தேவ பக்தியாய் பிரதிபலித்து வாழ்வதற்குரிய 'பரிசுத்தாவியின் இணைப்பை' துண்டித்துவிடுகிறது!**

*இவ்வுலக மானிடரிடத்தில், சர்வ சாதாரணமாய் புழங்கும் 'மனுஷர் ஏற்றுக்கொள்ளும்படி' ஜீவித்திடும் இப்பாவத்திலிருந்து நீங்கள் எப்படியாவது பூரண விடுதலைபெற நாடுவதே, ஞானமுள்ள நடவடிக்கையாகும். இது சற்றுகடினமேயானாலும், பெலனற்ற நமக்கு 'வல்லமையைத்' தரும் பரிசுத்தஆவியானவரை நாடி ஆவியில் நிறைந்து, பக்தியுடன் வாழ்வோமாக! ஏனெனில், நாம் சதா மற்ற ஜனங்களோடு புழங்க வேண்டியிருப்பதால், நாம் தொடர்ச்சியாக,* **மற்றவர்கள் நம்மைப் பற்றி என்ன அபிப்ராயம் கொண்டிருக்கிறார்கள்?** *என எண்ணும்படி சோதிக்கப்பட்டு வீழ்ச்சிகளடைந்துள்ளோம்! இருப்பினும், இதிலிருந்து விடுதலையாவது சாத்தியமே! மற்றவர்கள் உங்களை எவ்வாறு நிதானிக்கிறார்கள் அல்லது குறைபேசுகிறார்கள் என்பதில் சிறிதும் அக்கறை கொள்ளாமலிருக்கும், இம்மிகப்பெரிய இரட்சிப்பை நீங்கள் ருசித்துவிட்டால், அதுபோதுமே! இதுவே, எல்லா சூழ்நிலைகளிலும் தேவபக்திக்கேதுவாய் பிரதிபலித்து எதிர்கிரியை நடப்பிப்பதற்கு உங்களுக்குப் பேருதவி அளித்திடும்! சத்தியம் ஒன்று கேளுங்கள்: தேவனுடைய அபிப்ராயம் எதுவோ, அதைப்பொறுத்துதான் நாம் நியாயத்தீர்ப்பின் நாளில் நியாயம் தீர்க்கப்பட போகிறோம். எனவே மனுஷர் என்ன நினைக்கிறார்கள் அல்லது சொல்கிறார்கள் போன்ற அபிப்ராயங்கள் கடுகளவுகூடசெல்லாது! அவையனைத்தும் குப்பைகள்!!*

**"நீங்கள் தேவ பக்திக்கு ஏதுவாய் பிரதிபலித்த ஒரு காரியத்தை, சொந்த ஆதாயம் கருதியே செய்கிறீர்கள் என யாரேனும் நினைத்தால், நினைக்கட்டுமே! நீங்கள் நிஜமாகவே உங்களுக்கானதைத் தேடவில்லை என்ற உண்மையைத் தேவன் அறிந்திருந்தால், அது போதும்!**

*அதுபோலவே, நீங்கள் தேவனுக்கு முன்பாக, பிரதிபலித்து செய்திடும் கிரியைகளை, ஒருவர் எடைபோட்டு, நீங்கள் பெருமையில் மிதக்கிறீர்கள் என்று நினைத்தால், நினைக்கட்டுமே! நீங்கள் மாத்திரம் எப்போதும் உங்களைக்குறித்த* **தாழ்மையின் சிந்தையில் வேரூன்றி** *நிலைத்திருந்தால், அதுபோதும்! அது ஒன்றே, தேவனுடைய நாமத்திற்கு மகிமையை கொண்டுவந்து சேர்க்கும்! அல்லேலூயா.*

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

## ஜெபத்தில் ‘சிலருக்குத்’ தேவன் ஒளித்துக் கொள்வது ஏன்?

*நம் அன்பின் தேடுதலை நாடும் கர்த்தர்*

நீங்கள் தேவனுடைய நேசத்திற்கு உரியவர் தானா? அவரது அன்பை, உங்கள் ஜீவியத்தில் அளவிலாது நாள்தோறும் ருசித்து வரும் தாசரா நீங்கள்? இதுபோன்ற தூய்மையான தெய்வ நேசத்தை முன்வைத்து **‘தேவஅன்பில் ஒப்புரவாகி வாழ்பவனே’** தேவனுக்கு சிநேகிதனாயிருப்பான். தேவனுடைய பிரதான விருப்பமும் **“தன்னை முழுவதும் உங்களிடம் ஒப்படைப்பதுதான்!”** என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். அப்படியிருந்தபோதும், உங்களின் மன நோக்கத்தில் வேறுபாடு வருவது அறிந்து, தேவன் தன்னை அவ்வப்போது, உங்களிடமிருந்து தன்னை மறைத்துக் கொள்வார்! அதேனென்றால், நீங்கள் தேவனைத் தேடுவது, ஒரு சடங்காச்சாரமாய் உங்களுக்கு மாறிவிட்டால், தன்னை அவர் ஒளித்துக் கொள்வார்!

“ எம்மட்டும் ஒளித்துகொள்வார்? நீங்கள் மனந்திரும்பி, மெய் விசுவாசத்தோடும், மெய் அன்போடும் அவரைத் தேடும்வரை ஒளித்து கொள்வார்!

அல்லது, இந்த உலக வாழ்க்கையின் மாயையில் நீங்கள் சிக்கி, இந்த உலகத்தின் துரித சக்கர சுழற்சியில் சென்று நீங்கள் தேவனைத்தேட மறக்கும்போது.... அல்லது தேவனைத் தேடாமல் சோம்பலுக்கு இடம் தந்தபோது, தன்னை உங்களிடமிருந்து ஒளித்துக் கொள்வார். **“வாஞ்சையுடன் தன்னைத் தேடுகிறவனே கண்டடைவான்”** என்பது, தேவனுடைய நிரந்தரமான நியமனமாய் இருக்கிறது. தேவன் தன்னை ஒளித்துக் கொள்வது என்ன காரணமாய் இருந்தாலும், அவரது மகா உண்மையின் நிமித்தமே அப்படிச் செய்வார்! அவ்வாறு அவர் தன்னை ஒளித்துக் கொள்வதும் “அவரது அன்பின் தயவு” என்பதை நீங்கள் மறந்திடக் கூடாது. இதை உணராமல், வேறு ஏதாகிலும் காணிக்கை அல்லது தியாகம் செய்து விட்டால், தேவன் உங்களை மீண்டும் சந்திப்பார் என்றெல்லாம் நீங்கள் எண்ணிவிடக் கூடாது! ஏனெனில், அது தேவனுக்குரிய வழி இல்லை! அதற்கு மாறாக, நீங்கள் மனந்திரும்பி அவரது சமூகத்தை மீண்டுமாய் நாடிசென்று, பொறுமையுடனும், அன்போடும், தாழ்மையோடும்.... அவரது வருகையை எதிர்நோக்கி ஜெபத்தில் காத்திருப்பீர்களாக!....

“ இந்த காத்திருப்பில்தான் “மெய்யான ஆராதனை என்றால் என்ன?” என்பதை அனுபவபூர்வமாய் நீங்கள் ருசிப்பீர்கள்! இந்த பாக்கியம்

நிறைந்த இடத்தில்தான் "பிதாவே, நீர் ஒருவர் மாத்திரமே எனது பிரியம்... எனது சுயநலமான விருப்பங்கள் யாதொன்றும் நான் இப்போது தேடவில்லை" என்ற உங்கள் சிந்தையை தேவனிடம் இருதயம் நொறுங்கி கூறிடும் வாய்ப்பை பெறுகிறீர்கள்!

இவ்வாறாகவே, தேவனை நீங்கள் சந்திக்கும் ஜெபத்திற்குரிய உயிரோட்டம் நாளுக்குநாள் உங்கள் வாழ்வில் தொடர்ந்து அதிகரித்திட முடியும்!

தனக்குண்டான யாவற்றையும் புறக்கணித்தவனும், **'இருப்பது போதும்' என்ற திருப்திகொண்டவன் மாத்திரமே** தன் நேசரின் வருகைக்காக பொறுமையுடன் காத்திருக்க முடியும். இவ்வாறு காத்திருக்கும் தனக்குரியவர்களைச் சந்திக்கவே அவர் வருவார்! ஆம், பரவசம் மிகுந்த அன்புடன் வருவார்! ஆகவே, இந்த உலக வனாந்திரத்தில் விடாய்த்துப் போன உங்கள் இருதயம், அவர் அன்பினால் குளிர்ந்து, நனைந்து.... அவரோடு ஒன்றறக்கலந்திட உங்களை ஒப்புக்கொடுத்து வாழுங்கள்! இதுவே, ஜெப ஜீவியத்தில் கர்த்தரை ருசித்திடும் இனிமையான பங்கு!

- மேடம் குயான்

*(மேடம் குயான் அம்மையாரின் "ஜெபத்தில் தேவனை ருசிப்பது எப்படி?" என்ற அரிய புத்தகம் தபாலில் பெற ₹ 70.00 அனுப்பவும்)*

---

## கருநாகம் தன் சட்டையை கழற்றிவிட்டால், விஷம் மாறுமோ?

*தித்திப்பு கனிபெற, கசப்பு மரமே ஒழிய வேண்டும்*

விஷம் நிறைந்த ஒரு கருநாகம், எத்தனை முறை தான் போட்டு புழங்கிய சட்டையை கழற்றி விட்டாலும், அது இன்னமும் கருநாகம்தான்! ஒரு கிராமத்தில் இருந்த ஒரு பெண் தன், வீட்டிலுள்ள 'ஒட்டடையை' தினமும் தட்டி சுத்தம் செய்வாள். ஒரு சமயம், அவ்வாறு சுத்தம் செய்து கொண்டிருந்த நேரத்தில் "ஓ என் தேவனே, நான் என் வீட்டை சுத்தம் செய்யும் இந்த வேளையில்... நீர் தயவாய் இரங்கி என் இதயத்தை சுத்தம் செய்தருளும்" என ஜெபித்தாள். அவளுடைய ஜெபத்திற்கு உடனடியாக பதில் கிடைத்தது!

தேவன் அவளைப் பார்த்து "மகளே, உன் அறையிலுள்ள **சிலந்திப் பூச்சி இருக்கும் மட்டும், தொடர்ந்து ஒட்டடை வந்து கொண்டுதான் இருக்கும்!** ஆகவே நீ முதலாவது உன் வீட்டிலுள்ள சிலந்திப் பூச்சியை அப்புறப்படுத்து!" எனக் கூறினார். அப்படி அவள் முயன்று பார்த்த போது, சிலந்தி பூச்சி ஓடி ஓடி ஒளிந்து கொண்டபடியால் அவளால்

அதைக் கொல்ல முடியவில்லை! இதுபோலவே, நம் ஜீவியத்தில் பாவம் அங்கொன்றும் இங்கொன்றுமாய் தோன்றி நம் சமாதானத்தை தொடர்ந்து பறித்துக் கொண்டே இருக்கிறது!

கிறிஸ்தவ விசுவாசிகள்கூட, உலகத்திலுள்ள பொதுவான மார்க்க போதனைகளைத்தான் கைக்கொள்ளப் பார்க்கிறார்கள். அவர்களின் போதனை என்னவெனில் "**நீங்கள் நல்ல மனுஷனாய் மாற நல்ல கிரியைகளை செய்யுங்கள்**" என்பதுதான்.

> **"இது எப்படியெனில், ஒரு கசப்பான மரத்தைப் பார்த்து "நீ தொடர்ந்து நல்ல கனி கொடுத்தால், கசந்த மரம் ஒழிந்து, நல்ல மரமாய் மாறிவிடலாம்!" எனக் கூறுவதற்கு ஒப்பாய் இருக்கிறது.**

"இது சாத்தியமில்லை" என்பது உங்களுக்கே தெரியும்! பின்பு ஏன் நீங்கள் தொடர்ந்து நல்லது செய்து விட்டால், நல்லவனாய் மாறிவிடலாம் என்று எண்ணிக் கொண்டீர்கள்? **அந்த கெட்ட மரமே ஒழிய வேண்டும்!** இதைத்தவிர வேறு வழியில்லையென, பல ஆண்டுகளாய் கிறிஸ்தவ விசுவாசியாய் இருக்கும் நீங்கள் அறியவில்லையா?

நான் சிலுவையில் அறையப்பட்டேன்! **இனி நான் அல்ல!** என்னில் பிழைத்திருப்பது கிறிஸ்து மாத்திரமே! என்றெல்லாம் மிகத் தெளிவாக கலாத்தியர் 2:20- ம் வசனத்தில் வேதம் கணீரென ஒலிப்பதை நீங்கள் கேட்டதில்லையா?

நீங்களே புறக்கணிக்கப்படாவிட்டால், சட்டையை கழற்றிப் போடும் கருநாகத்தைப் போல்தான் இருப்பீர்கள்! 'இந்த உண்மை' அந்த கருநாகத்திற்கே 'இயல்பாய்' தெரிந்திருக்கும்!

நீங்கள் நன்மை செய்ய முயற்சித்தது உண்மைதான், ஆகிலும் நீங்கள் ஒரு கருநாகம்! தயவாய் கிறிஸ்துவிடம் வந்து, **உங்களை சிலுவையில் புறக்கணித்து,** கிறிஸ்துவோடு ஒட்டிக் கொள்ளுங்கள்! புதிய சிருஷ்டிப்பை கண்டடையுங்கள்! உத்தம கிறிஸ்தவனாய் வாழுங்கள்!

- சாது சுந்தர்சிங்

---

## 'அபிஷேகம் பெற்றவர்களையே' தன் ஊழியத்திற்கு அழைத்தார்!

*அழைப்பில்லாமல் ஊழியம் செய்வது துணிகரம்*

நம்முடைய இரட்சகர் தனது ஊழியத்திற்கு முழு அர்ப்பண ஊழியர்களை ஏற்படுத்தின விதத்தைப் பாருங்கள். தான் தெரிந்து கொண்டவர்களை மூன்று வருஷகாலமாய் தம்மோடு வைத்து ஆயத்தப்படுத்தி வந்தார்! அதன்பிறகு, உன்னத பெலனாகிய பரிசுத்த ஆவியானவரை அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும்,

**அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ளுமுன் ஊழியஞ்செய்யக்கூடாதென்றும்** *உறுதியாய் கட்டளையிட்டார் (லூக்கா 24:49). அந்தப்படியே அவர்கள் 'பெலனைப் பெற்றுக்கொண்டு' அவருக்குச் சாட்சியாகப் புறப்பட்டுப் போனார்கள்!*

"

**தம்மால் இரட்சிக்கப்பட்டு, ஆவியின் நிறைவைப் பெற்று, தனக்கென அழைத்துக் கொண்டவர்களையே தமக்கு ஊழியஞ்செய்யும்படி அனுப்பினாரேயன்றி மற்றவர்களை அவர் அனுப்பவில்லை!**

*ஆவியானவரைப் பெற்றுக்கொண்டால்தான் பிரசங்கம் பண்ணத் தெரியுமென்று நாம் சொல்லுகிறதில்லை. 'பேச்சுத் திறமை' அநேகருக்குண்டு. கேட்போர் மகிழத்தக்க விதமாய் சாதுரியமாயும் இன்பமாயும் பேசுகிறவர்கள் அநேகர்!* **அதுதான் பெரிய மோசம்.** *'குணப்படாதவர்கள்' தேவதூதனைப்போல் பிரசங்கித்தாலும் அவர்கள் கர்த்தரால் அனுப்பப்பட்ட சாட்சிகள் அல்ல: "அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்களாயிருக்கிறார்கள். அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே!" ஆகையால், ஊழியம் செய்ய முன்வந்த அனேகர், நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால், அது ஆச்சரியமல்லவே! "அவர்களின் முடிவு, அவர்களின் சுய கிரியைகளுக்குத்தக்கதாயிருக்கும்" என்று அப்போஸ்தலன் மிகுந்த மனவேதனையோடு எழுதுகிறார் (2கொரி.11:13-15).*

*நம்மிடம் வந்து ஊழியம் செய்த கிறிஸ்துவானவர், தம்மைக் குறித்துக் கொடுத்த சாட்சி,* **"கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்;** *தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்" என்றார் (லூக்கா 4:18). அப்போஸ்தலனாகிய பேதுருவும் தன் ஆண்டவரைக் குறித்து: "நசரேயனாகிய இயேசுவை தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனே கூடயிருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையிலகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார்" என்று சாட்சி கொடுத்தார்!*

"

**நம்முடைய எஜமான், ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றாலன்றி இந்த ஊழியத்தில் பிரவேசிக்கக்கூடாதென்றால், அறிவீனரும் பெலவீனர்களுமாகிய நாம் அழைக்கப்படாமலும், இந்த உன்னத**

பெலனை பெற்றுக்கொள்ளாமலும் ஊழியம் செய்யப் பார்க்கிறது எவ்வளவு துணிகரம்?

*அப்போஸ்தலனாகிய பவுல் கூறிய சாட்சியில்: "என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் 'பெலத்தினாலும்' உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது. அவைகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்" என்றார் (1கொரி.2:5,13).*

*வேறொரு இடத்தில் "எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடு மாத்திரமல்ல: வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் வந்தது" என்றும் "விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோமென்பதற்கு நீங்களும் சாட்சி, தேவனும் சாட்சி" என்றும் தைரியமாய் சொல்லுகிறார்! (1தெச.1:5; 2:10).*

"

**ஆவியைப் பெற்ற ஊழியக்காரனுடைய ஊழியமும் ஜீவியமும் எப்படியிருக்கிறதென்று பாருங்கள்! ஊழியத்திலும் வல்லமை, ஜீவியத்திலும் வல்லமை.... அதுதான் நமக்கு வேண்டும்!**

*அப்போஸ்தலனாகிய பேதுருவின் சாட்சியில், ஆவியின் பெலத்தோடு செய்யப்படும் பிரசங்கங்கள் எப்படிப்பட்டவைகளென்றும், அதினாலுண்டாகும் மாறுதல்கள் எவ்வளவு அதிசயமானவையென்றும்! தன் சொந்த அனுபவத்தில் கண்ட பேதுரு சொல்லுகிறதென்ன?: "பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே 'உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக் கொண்டு' இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது" என்றார் (1பேதுரு 1:12). கொர்நேலியுவின் வீட்டில் இந்த பேதுரு* **ஆவியினால் நிறைந்தவராய்** *சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபொழுது உண்டான மாறுதல் எப்படிப்பட்டதென்று நமக்குத் தெரியும்!*

*இவ்விதமாய் நமது ஆண்டவரும், அவரது அப்போஸ்தலரும் (அழைக்கப்பட்டவர்கள்), எக்காலத்திலுமுள்ள பரிசுத்தவான்களும்,* **ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டு செய்த இந்த மகத்துவமான ஊழியத்தை,** *நாம் ஆவியைப் பெறாமல் செய்து வருவது எவ்வளவு பெரிய குற்றம்! சகோதரரே! ஆவியின் நிறைவைப் பெற்றுக்கொள்ளாமல் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க நமக்கு என்ன நியாயமுண்டு? நீங்கள்*

அவரைப் பெற்றுக்கொண்டால், உங்கள் ஊழியத்தில் பெரிய மாறுதலைக் காண்பீர்கள். கர்த்தருக்கு ஊழியஞ்செய்வது, உங்களுக்குத் தொல்லை போலிராமல், பெரு மகிழ்ச்சியாயிருக்கும்! காலை பிரசங்கம் முடிந்தது. இனி, மாலை பிரசங்கம் செய்ய வேண்டுமே! இந்த வாரம் முடிந்தது. இனி, அடுத்த வாரத்திற்கு நான் என்ன செய்யட்டும்? என்றெல்லாம் நாம் கலங்க அவசரமிராது! நாமாகவே இந்த ஊழியத்தைச் செய்ய பார்ப்போமானால், சீக்கிரமாய் சோர்ந்துபோவோம்! பிரசங்கிப்பது கஷ்டமும் தொல்லையுமாயிருக்கும்! ஆவியானவர் நம்மை உபயோகிப்பாரானால், இதைப்போல் மகிழ்ச்சியும் ஆனந்தமுமான ஊழியம் இவ்வுலகில் வேறொன்றுமில்லை!

தெய்வ அழைப்புடன் அவரது ஆவியின் அபிஷேகம் பெற்ற ஊழியர்களே, நீங்கள் பாக்கியவான்கள்!

- பரமானந்தம் ஐயர்

---

## ‘ஆத்தும ஆதாய பாரமே’ தேவனுடைய பரந்த குடும்பம்!

*எல்லோரையும் சேர்த்து கட்டுவதே, இயேசுவின் இதய வாஞ்சை*

“என்னோடு ஜனங்களை கூட்டிச் சேர்க்காதவர்கள் அவர்களைச் சிதறடிக்கிறார்கள்” என்ற இயேசுவின் வார்த்தைகளில் குழப்பம் ஏது? (மத்தேயு 12:30). நீங்கள் இயேசுவுக்கு ஆத்துமாக்களை ஆதாயம் செய்கிறவர்களாயிருக்க வேண்டும்! இல்லையேல், ஆத்துமாக்களைத் துரத்துபவர்கள்தான்! **ஆத்தும ஆதாயம் செய்து சேர்க்காதவன் அல்லது சேர்க்கத் தெரியாத கிறிஸ்தவன் எவனும் பின்வாங்கிய கிறிஸ்தவன்!**

நீங்கள் எதிர்கொள்ள வேண்டிய சில கேள்விகள்: “ஆத்தும வாஞ்சையுடன் பிறருக்கு நற்செய்தியை அறிவிக்கிறீர்களா? ஆர்வமுடன் நற்செய்தி கைப்பிரதிகளை பிறருக்குத் தரும் வழக்கம் உண்டா? சடங்காச்சார மற்றும் மார்க்க மூடப்பழக்கங்களால் கட்டப்பட்டிருப்போரை விடுவிக்கும்படி சந்திக்க உங்கள் கால்கள் எளிய கிராமங்களுக்கு விரைகின்றதா? ஏதாவது ஒரு வழியில் “நேரடி நற்செய்தியறிவிப்பு பணிக்காய்” வாரந்தோறும் எத்தனை மணி நேரங்கள் ஒதுக்குகிறீர்கள்? மிஷனரிப் பணியில் ஈடுபாடு கொள்வதற்கு, உங்கள் பிள்ளைகளை ஊக்குவித்ததுண்டா?

நற்செய்தியறிவிப்பில் குளிர்ந்து போன நிலை, மற்றும் கரிசனையின்மைக்காய் நாம் “துயரப்படுவோமாக!” நீதியின்மேல் நமக்குப் பசிதாகம் இருக்குமானால், அநேக துன்மார்க்கரை, நீதிநெறிக்கு வழிநடத்த வீறுகொண்டு எழும்பியிருப்போமல்லவா? (தானி.12:3a).

நீங்கள் இழந்துவிட்ட ஆத்துமாதாய அக்கினியைத் திரும்பவும் உங்கள் இதயத்தில் தரும்படி ஆண்டவரிடம் வேண்டுதல் செய்யுங்கள்! அந்தப்படியே, “ஆண்டவரே, ஆத்துமாக்களைத் தாரும்; இல்லையேல் என் ஆத்துமாவைத் தீரும்” என்று ஆதி பரிசுத்தவான்களும் கதறி ஜெபித்துள்ளார்கள்!

இயேசுவின் வார்த்தைகளைக் கேட்கவும், அவரால் வியாதிகள் நீங்கிக் குணமடையவும் பொது ஜனங்கள் எப்பொழுதும் அவரைச் சூழ்ந்திருந்தனர்:

*ஒருமுறை அவர் ஒரு வீட்டிலுள்ள பெருங்கூட்டமொன்றிற்கு உபதேசித்துக்கொண்டிருக்கையில், அவரது தாயாரும் சகோதரரும் அவருடன் பேச விரும்பி வெளியே நின்றுகொண்டிருந்தனர். இத்தகவல் அவருக்குக் கொடுக்கப்பட்டதும், அவரது உடனடிப் பதிலைக் கவனியுங்கள்: “என் தாய் யார்? என் சகோதரர்கள் யார்?” பின்னர் தமது சீடர் பக்கம் கையை நீட்டி, “என் தாயும் சகோதரர்களும் இவர்களே. விண்ணகத்திலுள்ள என் பிதாவின் சித்தம் நிறைவேற்றுபவரே என் சகோதரரும் சகோதரிகளும் தாயும் ஆவர்” என்று கூறி* **‘என் குடும்பம்’ என்ற சிறிய எல்லையை மறுத்து** *‘முழு உலகத்தையும்’ எல்லையாய் காண்பித்தார்! பந்த பாசமென்ற குறுகிய வட்டத்திற்குள், அவர் சிக்கவில்லை (மத்தேயு12:46-50). இன்னொரு சமயம் அவர் போதித்துக்கொண்டிருக்கையில், கூட்டத்திலிருந்த ஒரு மாது தனது சத்தத்தை உயர்த்தி, “பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறுபெற்றவர்” என்றார் (லூக்கா 11:27). அதற்கும் அவர் மறுமொழியாய் சொன்னது: “தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்போர் இன்னும் அதிகம் பேறு பெற்றோர்” என்றார் (வச.28). இயேசுவின் இவ்வித வாஞ்சையும் தாகமும் அவரது வாழ்நாள் முழுவதிலும் தலையோங்கி நின்றது!*

இயேசு வழங்கிய முக்கியமான சத்தியம் என்னவென்றால், அவரது சீடர்களும் தேவனை “**எங்கள் பரம பிதா**” என்ற உரிமையை பொதுவாய் அனுபவிக்கலாம் என இயேசு வெளிப்படுத்தியதேயாகும்! ஆண்டவர் இயேசு, உயிர்த்தெழுந்த பின்பு, மகதலேனா மரியாளிடம் கூறிய வார்த்தைகள் இந்த வெளிப்பாடுதான்: “நீ என் சகோதரர்களிடம் சென்று அவர்களிடம், ‘என் தந்தையும் உங்கள் தந்தையும்’ என் தேவனும் உங்கள் தேவனுமானவரிடம் செல்லவிருக்கிறேன் எனச் சொல்” என கூறி அனுப்பினார் (யோவான் 20:17). ‘என் குடும்பம்’ ‘என் சபை’ என்ற சின்ன ஸ்தாபன வட்டத்தை, இன்று அனேகர் போற்றுதற்குரியது போல் வைத்திருப்பது வேதனையன்றோ? “தேவன், ஒரேபேறான

*குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு* **அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்**" *(யோவான் 3:16) என்ற பரந்த இருதயமே, நம்மை சுவிசேஷ பாரத்திற்கு உந்தித் தள்ளிட முடியும்! அப்படியொரு பாரத்தை நாம் அனைவரும் பெற்று, நம்மிலும், நம் சபைகளிலும் 'எழுப்புதல்' காண்போமாக!*

*- R.ஸ்டான்லி BYM*

---

## 'சகோதரருக்குள் விரோதம் உண்டு பண்ணுதல்' கொடிய பாவம்!

*தீமையோடு பயணம் செய்யாதீர்கள்*

*"ஆறு காரியங்களை கர்த்தர் வெறுக்கிறார்! ஏழும் அவருக்கு அருவருப்பானது!" என நீதிமொழிகள் 6:16 கூறுகிறது! அதாவது, முதல் ஆறு தீமைகளை ஒன்றன்பின் ஒன்றாய் பயணித்து கடந்து, தீவினை செய்தவன், இந்த 'ஏழாம்' முடிவாகிய "சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதல்" என்ற 'கர்த்தருக்கு அருவருப்பான' செயலுக்கு சென்றடைகிறான்! அவன் பயணித்துச் சென்ற அந்த ஆறு தீமைகளை கண்ணோக்கி, ஒருவேளை, நீங்கள் அந்தப் பயணப் பாதையிலிருந்தால்,* **நீங்கள் எந்த பயண நிலையில் இருக்கிறீர்கள்?** *என்பதை உணர்ந்து, மனம் திரும்பி, கர்த்தருடைய வழியில் நடவுங்கள்:*

**1. 'மேட்டிமை'யான கண் :** *தீமை துவங்கும் இடம் எப்போதுமே 'பெருமையில்' தான் ஆரம்பமாகிறது! 'தாழ்மையில்' தேவனோடு பாதுகாப்பாய் வாழ்பவன், இயேசுவைப்போலவே தன்னைவிட "பிறரை மேன்மையாக எண்ணியே" அவர்களைக் காண்பான்! (பிலி.2:3). இதனிமித்தமே, நல்ல ஆலோசனைகளை பிறரிடமிருந்து கேட்க, செவிகொடுப்பான்! 'மேட்டிமை' பாதித்த கண்ணுடையவனோ "பிறரை தாழ்வாக எண்ணி" அவர்களைக் குனிந்து காணத் தொடங்கி விடுவான். எல்லோரையும் விட 'தான் என்ற அகந்தையில்' பிறருக்கு புத்திசொல்லுகிறவனாய் மாறி, எந்த ஒரு மனிதனின் ஆலோசனையையும் செவிகொடுக்க மறுத்துவிடுவான்!*

*சகோதரர்களின் பிரிவினைக்கு காரணமாயிருந்த "யூதாஸ்காரியோத்" அப்படியிருந்தான்! 'பணப்பை' பொறுப்பிலிருந்த அகந்தையில், இயேசுவின் பாதத்தில் ஒரு ஸ்திரீ அதிக விலையான நளதத்தை ஊற்றி அவரை அன்புகூர்ந்ததைக் குறித்து, சுற்றியிருந்த சீஷர்களுக்கு ஆலோசனை கூறினான்: "இந்த நளதம் 300-பணத்திற்கு விற்று, தரித்திரருக்கு கொடாமல் போனதென்ன?" என்றான். அதை மறுத்த இயேசு "அனாதை அல்லது ஏழைகள்" எப்பொழுதும்*

உங்களிடம் இருக்கிறார்களே, இவளோ **கர்த்தரை சேவிக்கும் சந்தர்ப்பத்தை** சரியாகப் பயன்படுத்தி "என்னை அடக்கம் பண்ணும் **நாளுக்காக** இதை வைத்திருந்தாள்" என இயேசு கூறிய சிறந்த ஆலோசனையை ஏற்காமல், மனம்புண்பட்டு அவன் வெளியேறிய நேரம், அவனுக்கு 'இருட்டாய்' மாறியது! என வசனங்கள் கூறுகின்றன! இந்த ஆரம்ப நிலைமையான "மேட்டிமையான கண்" தீமையிலிருந்து மனம்திரும்பிவிட்டால், இரண்டாவது பள்ளத்திற்குள் போவது அவசியமிருக்காதல்லவா?

**2. பொய் நாவு :** தன் பெருமையை இறுகப்பிடித்து வாழ்ந்தவன், இனி விரும்புவதெல்லாம் "பொய் நாவு" ஒன்றேயாகும்! தேவனுக்கு செவிகொடுப்பதையோ, மற்ற எந்த பரிசுத்தவான்களுக்கும் செவி கொடுப்பதையோ மறுத்த இவன் இப்போது, இரண்டாவது பள்ளமாகிய 'பொய் நாவிற்குள்' பிரவேசிக்கிறான்: இனி அவன் ஏதாகிலும் தான் விரும்புவதைக் கூற முயலும்போது "**இதை கர்த்தரே கூறினார்!**" என தன்னை சூழ்ந்தவர்களிடம் பொய்கூறி, தன் பெருமையை தக்க வைத்துக்கொள்வான்! அன்று பிசாசானவன், ஏதேன் தோட்டம் பிரவேசித்து (இன்று குடும்பங்களிலும், சபைகளிலும் பிரவேசித்து):

> "என்ன, தோட்டத்தின் நடுவில் இருக்கும் இந்த விருட்சத்தின் கனியைக் குறித்து, இதைப் புசித்தால், நீங்கள் சாவீர்கள் என்றா கர்த்தர் சொன்னார்? நான் சொல்லுகிறேன் நீங்கள் சாகவே சாவதில்லை" என கர்த்தருடைய வார்த்தையைபோல் சத்தியம் செய்து பொய்கூறி, தேவ ஜனத்திடமே வஞ்சனை புரிந்தான்! (ஆதி.3:3,4).

இந்த இரண்டாம் பள்ளமாகிய தீமைக்குள் நீங்கள் பயணித்திருந்தால், "உங்கள் மனந்திரும்புதல்" உங்களை 3-ம் பள்ளத்திற்குள் நீங்கள் விழுவதை தடுத்து நிறுத்துமல்லவா?

**3. குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்தும் 'கை' :** தன் பொய் நாவினால் வஞ்சனை புரிந்து, பிறரை நம்ப வைத்தவன், அடுத்த தீமையின் பள்ளமாகிய "குற்றமற்றவர்களின் இரத்தம் சிந்தவைக்கும் கை" உடையவனாய் மாறிவிட்டான்! தன் பொய் நாவில் வீழாதவர்களை, இப்போது இவன் "இருதயத்தில் மறைவாக பகை கொண்டான்". அதனிமித்தம், தன் 'பொய் நாவை' வேதவாக்கியமாய் ஏற்றுக்கொள்ள மறுத்த அந்த சிறந்த விசுவாசிகளை, தன் உள்ளத்தில் பகைத்து, பல தீங்குகளை மறைமுகமாக திட்டம் தீட்டி செயல்படுத்தினான்! அவனுடைய 'பொய் நாவை' கர்த்தர் உரைத்ததுபோல் நம்பிய கூட்டத்தாரோடு சேர்ந்து, பல துன்பங்களை அவர்களுக்கு விளைவித்தான்! முடிவில், "குற்றமற்ற அவர்களின் இரத்தத்தை" தன்

*இருதயத்தில், அவனது கை சிந்த வைத்த பிறகே திருப்தி கொண்டான்! அன்று கிறிஸ்துவை இரத்தம் சிந்த வைத்திட பல உபாயங்களும், திட்டங்களும் தீட்டி, அவரின் சொந்த சீஷன் யூதாஸ்காரியோத்தையும் பயன்படுத்தி 'களங்கமற்ற இயேசுவின் இரத்தத்தை சிந்த வைத்த' நிலைக்கு அவனது தீமை பயணித்து சென்று விட்டது. இவ்வித தீய செயலைக்கூட, அவனை நம்பி நின்ற கூட்டத்தார், ஏற்றுக்கொள்வதும் ஒரு விந்தைதான்!*

> "**அந்த இரத்தம் வெளியில் உள்ள சிகப்பு இரத்தம் அல்ல, மறைவான இருதயத்தில் வஞ்சனை புரிந்து தங்கள் இருதயத்தில் தங்கள் கைகளால் மனஉளைச்சல் கொடுத்து சிந்த வைத்த, இரத்தம்!**

*இந்த மூன்றாம் பள்ளமாகிய தீமைக்குள் நீங்கள் பயணித்திருந்தால், கர்த்தர் உங்களை கிருபையாய் தூக்கி எடுக்க மனந்திரும்புங்கள்! அது, நீங்கள் நான்காம் பள்ளத்தில் விழுவதை தடுத்து நிறுத்த முடியுமல்லவா?*

**<u>4. தொடர்ந்து தீமை செய்ய வகை பார்க்கும், இருதயம்:</u>** *எந்த திருந்துதலும் இல்லாமல் மூன்று தீமைகளில் பிரவேசித்தவன், தொடர்ச்சியாய் தீமை செய்ய 'வகை பார்க்கும்' இருதயம் கொண்டவனாய், அவனை மாற்றிவிட்டது! அவன் தீய செயல் அனைத்தும், அவனது இருதயத்தில் வகை பார்த்து* (Devised) *தீட்டப்பட்டதென ஒருவரும் அறியார்கள்! வெளிப்புற வாழ்க்கையில் நல்லவனாய் காட்டிக்கொண்ட அவனது இனிமையை, அப்படியே நம்பி ஏற்றுக் கொள்ளும் கூட்டம், அவனைச் சூழ இருந்தபடியால், உள்ளத்தின் கயமையை மறைத்து வாழ்ந்தான். துரோகம் செய்த யூதாஸின் "வெளிப்புற முத்தத்தினால்" தீமையை மறைத்துவிட நாடும் துன்மார்க்கமே அவனை பிடித்துக்கொண்டது!*

*சினேகிதரே, நீங்கள் இந்த தருணத்திலாவது உள்ளம் வருந்தி தேவனிடம் வந்துவிட்டால், ஐந்தாவது கொடிய பள்ளத்திலிருந்து உங்களை காத்துக்கொள்ள முடியுமல்லவா?*

**<u>5. தீங்கு செய்ய விரைந்தோடும் கால்:</u>** *இந்த தீமையின் ஐந்தாவது பள்ளத்திற்கு வந்துவிட்ட அவன், இப்போது, "தான் செய்யும் தீமையை" நிறைவேற்றி முடிப்பதற்கு தீவிரம் கொண்டு 'ஓடிவரும் காலாய்' மாறிவிட்டான்! இத்தனை தீமைகள் புரிந்தவன் "கொன்று தீர்க்கும்" முடிவுவரை ஓயாதவனாய் இருந்தான். இயேசுவோ, சிலுவையில் தேவசித்தம் செய்து முடித்தார்! இவர்களோ, களங்கமற்றவரை சிலுவையில் அறைந்து கொன்றுவிட்டோம்! என, தங்கள் தீமையான கிரியைக்கு 'முடிந்தது' என அகந்தை கொண்டு,* **தங்களின் தீமையை**

தெய்வ கிரியை என நம்பும்படி *'வேதபாரக, பிரதான ஆசாரியன்' கூட்டத்தோடு தங்களை ஒளித்துக்கொண்டார்கள்!*

*சினேகிதரே, தீமை நிறைவேற்றி முடித்திட மகிழும் கூட்டத்தி லிருந்து, நீங்கள் மனம் திருந்திவிட்டால், அந்த கொடிய ஆறாவது பள்ளத்திற்குப்போவதை நிறுத்திக்கொள்ளலாமே?*

**6. அபத்தம் பேசும் 'பொய் சாட்சி' :** *இந்த ஆறாம் பள்ளத்திற்கு பிரவேசித்த அவன், இப்போது பகிரங்கமாய் தன் தீமை செயல் களுக்கு 'சாட்சிகளைத் தேடி' அலைந்து, ஒரு கூட்ட பொய் சாட்சி களைத் திரட்டி, தன்னை 'தூயவான்' என காண்பித்திட மிகுந்த பிரயாசமெடுக்கிறான்! அன்று பரிசேயர்கள் செய்ததைப்போல் 'பொய் சாட்சி சொல்ல' சிலருக்கு பணம் கொடுத்தார்கள்! சிலரை, பேதுருவிடம் கூறியதைப்போல் "நீ அவனுடையவனா?" என மிரட்டினார்கள்! தன் தீமை வலையில் விழுந்து "பொய் சாட்சிகளை" திரட்டியதினிமித்தம் "அவனை கொன்றுவிட வேண்டும்!" என, ஆரவார கூக்குரலிடத் தொடங்கி விட்டார்கள்!*

*இப்படியொரு, வேத வழிதவறி வந்துவிட்டோமே என, இப்போதாவது மனம் திரும்பிவிட்டால், கர்த்தரின் தயவு, உங்களை தீமையின் இறுதி ஆக்கினையிலிருந்து தப்புவிக்க முடியுமல்லவா?*

**7. முடிவாக, கர்த்தருக்கு அருவருப்பை தந்த 'சகோதரருக்குள்ளே விரோதம் உண்டு பண்ணுதல்' :** *இந்த முடிவான ஏழாவது பள்ளம், கர்த்தரையே சோதிக்கும் 'அருவருப்பாய்' மாற்றிவிட்டது! (நீதி.6:16). இந்த கொடிய தீமையை உணராமலே, தன் ஆறு தீமைகளை பயன்படுத்தி "இயேசுவின் சகோதரருக்குள்ளே" விரோதத்தை உண்டுபண்ணிவிட்டான்! அவனது நீண்ட தீமை பயணத்தின் எல்லைக்கு வந்துவிட்ட ஒருவனைக் குறித்து, நாம் வருந்துவது தவிர வேறு விமோசனம் அவனுக்கு இல்லை! ஏனெனில், "என்னோடு சேர்க்காதவன், சிதறடிக்கிறான்.... அவன் எனக்கு விரோதி!" என கூறிய ஆண்டவர், அவர்களைத் தன் ஒரே எதிரியான சாத்தானோடு சேர்த்து வைத்துவிட்டார்!*

*பிரிய சகோதர சகோதரிகளே, வேதம் எச்சரிக்கும் "தீமை பயணத்தின்" ஏதாவது ஒரு நிலையில் நீங்கள் காணப்பட்டால், தயவாய் மனம் திரும்புங்கள்! விடையே இல்லாத "சகோதரருக்குள்ளே விரோதம் உண்டு பண்ணுதல்" என்ற முடிவுக்கு வராதபடி மனம்திருந்திவிட்டால், "அவன் என்னோடிருக்கிறான்" என்ற பாக்கியத்தை மீண்டுமாய் பெற்றுவிட முடியுமல்லவா? கர்த்தர் நம் யாவருக்கும் கிருபை செய்வராக, ஆமென்!*

*- T.ரத்தினகுமார்*

## தேவ ஆலயம் கட்ட தனிஒரு போதகரின் வைராக்கியம்!

# விவியன் சைமன்



இங்கிலாந்து தேசத்தின் தென்கிழக்கு லண்டன் மாநகரத்தில் 1951-ம் ஆண்டு பெக்காம் என்ற இடத்தில், ஒரு பழைய தேவாலய கட்டிடம் இருந்தது. ஒரு சமயம் திடீரென பெக்காமில் நடந்த ஒரு கலகத்தில், கலகக்காரர்கள் ஒரு சக்திவாய்ந்த குண்டை அந்த தேவாலயத்தின் கூரையில் வீசி எறிந்த காரணத்தால், அதின் மேற்கூரை அதிகமாக பழுதாகிவிட்டது. கைவிடப்பட்டுப் போன அந்த ஆலயத்தின் நிர்வாகிகள் இப்பொழுது அந்த ஆலயத்தை இடித்து தரைமட்டமாக்கிவிட்டு, அந்த இடத்தை யாருக்காவது விற்றுவிட வேண்டும் என்று இருந்த சமயம், 5 அடி 3 அங்குலம் உயரமுள்ள ஒரு குள்ளமான வேதபோதகர் "விவியன் சைமன்" என்பவர் தேவாலய நிர்வாக கமிட்டியிடம் வந்து நின்றார்.

விவியன் சைமன் என்ற அந்த போதகர் நிர்வாக கமிட்டியினரைப் பார்த்து "உங்கள் தேவாலயத்தின் உத்திரங்கள், பலகைகள், செங்கல்கள், ஓடுகள், கற்கள் யாவையும் நான் இங்கிருந்து 17 மைல்கள் தொலைவில் கட்டப்போகின்ற "பெக்கின்" என்ற இடத்தின் சபை கட்டிடத்திற்கு தேவைப்படுகின்றது. மூடிக்கிடக்கும் உங்கள் தேவாலயத்தை நான் கொஞ்சம், கொஞ்சமாக பெயர்த்தெடுத்துக்கொண்டு சென்று எனது புதிய சபை வளாகத்திற்கு பயன்டுத்திக்கொள்ளுகின்றேன்" என்று கூறினார். "நீங்கள் அதை எவ்வாறு செயல்படுத்த போகின்றீர்கள்?" என்று கமிட்டியினர் கேட்டபொழுது "நான் ஒருவனாகவே அந்தக் காரியத்தை கவனித்துக் கொள்ளுவேன்" என்று போதகர் விவியன் சைமன் பதில் சொன்னார்.

அந்த பாழடைந்த ஆலயத்தை முற்றுமாக விவியன் சைமன் என்ற அந்த குள்ளமான போதகரிடம் ஒப்படைத்தார்கள். 3 ஆண்டுகளுக்கும் மேலாக ஆனது. அந்த ஆலயப் பொருட்களை அதாவது, செங்கல் முதல் கனமான உத்திரங்கள் வரை அவர் சுமந்து எடுத்துச் செல்ல அங்கும் இங்குமாக 30,000 மைல்கள் நடந்திருந்தார். 1,25,000 செங்கற்கள், 40 டன்கள் கருங்கற்கள், 40 டன்கள் மரம், 70,000 ஓடுகள், தேவாலயத்தின் அனைத்துப் பொருட்களும் "பிக்கின் ஹில்" என்ற இடத்துக்கு கொண்டு வரப்பட்டாயிற்று! எடுத்து வந்த பொருட்களால் அந்த பிக்கின் ஹில் என்ற இடத்தில் "பரிசுத்த மாற்கு ஆலயம்" என்ற புதியதோர் ஆலயத்தைக் கட்டி எழுப்பினார் போதகர் விவியன் சைமன்!

"ஜனங்கள் எல்லாரும் நான் ஏதோ தனியனாக இருந்து இந்தக் காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறேன் என்று நினைக்கின்றனர்! அது முற்றும் தவறான கணிப்பாகும். நான் தனியன் அல்ல, நான் ஒரு நல்ல பரலோக எஜமானனுக்கு தொண்டு செய்து கொண்டிருக்கிறேன்!" அவர் எப்பொழுதும் எனக்கு ஒத்தாசையாக என்னருகிலேயே இருந்து கொண்டிருக்கின்றார்! என்ற வாசகமே, உயிர்மூச்சின் ஊழிய நிறை வேற்றமாய் எனக்கு அமைந்தது! என, அறிக்கையிட்டார்!

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## உங்களை அண்டி வரும் 'இரட்சிப்பின் செய்தியை' தள்ளிவிட வேண்டாம்!

ஒரு சமயம், எங்கள் ஊருக்கு மேல் திசையில் உள்ள கிராமம் ஒன்றுக்கு ஒரு வாலிப மகள் மத்தியான வெயிலில் நடந்துபோய் கொண்டிருந்தபோது சற்றும் எதிர்பாராத விதமாக சற்று தொலைவில் ஒரு நாகப்பாம்பு, ஒரு எலியை துரத்திக்கொண்டு வருவதை அந்தப் பெண் கவனித்தாள். தனது எதிராளியின் வாய்க்கு தப்பும்விதமாக, அந்த எலியானது நேராக, அந்தப் பெண்ணின் கால்களுக்கு நேராக ஓடி வந்து, வேறு திசை வழியாக ஓடிவிட்டது. ஆனால், எலியை துரத்திவந்த பாம்பு, பெண்ணின் கால்களுக்கே விரைந்து வந்து அவளுடைய காலை ஓரிரு தடவைகள் சினங்கொண்டு கொத்திவிட்டுச் சென்றுவிட்டது. பாம்பின் கடியோடு ஊர் வந்து சேர்ந்த பெண்ணுக்கு எவ்வளவோ உடனடி சிகிச்சை செய்து பார்த்தும் பலனில்லாமல் அன்றைய தினமே அவள் மாண்டு போய்விட்டாள்.

மேற்கண்ட துயர சம்பவத்தை சொல்லி, மரணம் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும், எந்தவிதமாகவும் சடுதியாக வரலாம் என்று *சுவிசேஷகர் சாமுவேல் ஐயா* அவர்களின் செய்தியை கேட்டுக்கொண்டிருந்த ஒரு அம்மாள், நன்றாய் தூங்கி விட்டார்கள்! அவர்களுக்கு பக்கத்தில் இருந்த ஒரு சகோதரி "இது என்ன? இவ்வளவு எச்சரிப்பபோடு கடந்துவரும் தேவ செய்தியின் நேரத்தில், இந்த அம்மாள் நிர்விசாரமாக தூங்கிக் கொண்டிருக்கிறார்களே" என்று தனது உள்ளத்திற்குள்ளாக வருத்தமுடன் எண்ணிவிட்டு வீட்டிற்குச் சென்றார்களாம்.

பல ஆண்டு இடைவெளிக்கு பின்னர், தேவ செய்தி கொடுப்பதற்கு, அதே ஊருக்கு சாமுவேல் சுவிசேஷகர் சென்றிருந்த சமயம், அன்று பிரசங்க சமயத்தில் பாம்பு கடித்து உயிர் நீத்த வாலிப பெண்ணின் சரித்திரத்தை 'கோடிட்டு' பேசினார். அதுசமயம், "என் பிரசங்கத்தில் நன்றாக கண்ணயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த அம்மாவையும்" ஒரு நல்ல பாம்பு கடித்து கொன்று போட்டது என்று கேள்விப்பட்டு அதிர்ச்சியுற்றார்!

தேவ செய்திகளை ஏனோதானோவென்று கேட்டு, அதின் செய்திகளை கவலையின்றி வீசி எறிந்துவிட்டுச் செல்வது, மகா ஆபத்தான செயலாகும்!

ஓ, வாலிபனே, "இதோ இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சண்ய நாள்" (2கொரி.6:2) என்ற தேவனுடைய வார்த்தைக்கு செவிகொடுப்பதே நலம்!

- சுவிசேஷ மலர்

சந்தா அனுப்ப QR பயன்படுத்தவும்

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by:
Madurai Christian Fellowship, Regd Society,
*Editor* T.Rathnakumar, Madurai.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi.

maduraichristianfellowship@indianbk